இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 209 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 27 – ஞாயிற்றுக்கிழமை 10 மார்ச் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 209 : Thiruvalluvar Year - 2055 - Maasi 27 - Sunday 10 March 2024 - Dak 8 Pages ₹ 5.00

## நகராட்சி நிர்வாகத் துறை சார்பில்

# ரூ.330.42 கோடியில் குடிநீர் உள்ளிட்ட திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 118 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 21 பணிகளை திறந்து வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 212 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ.சரவணன், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 10 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 118 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 21 பணிகளை திறந்து வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 212 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்.**

பெருங்குடி மண்டலம், மடிப்பாக்கம் பகுதிக்கு 80 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்;

அண்ணா நகர் மண்டலம், நியு ஆவடி சாலையில் 68 இலட்சம் ரூபாய் செலவில் பணிமனை-101-க்கான புதிய அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 81 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிலான 2 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பேரூராட்சிகள் இயக்ககத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம்;

தென்காசி மாவட்டம், சிவகிரி பேரூராட்சியில் 99 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட பேருந்து நிலையம்;

என மொத்தம் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவிலான 2 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்**

வேலூர் மண்டலம், சோளிங்கர், ஆரணி, திருவத்திபுரம், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் ஆகிய நகராட்சிகளில் தினசரி சந்தை மேம்பட்டுப் பணிகள், நீர்நிலை மேம்பாட்டுப் பணி, புதிய அலுவலகக் கட்டடங்கள், பூங்கா மேம்பாட்டுப் பணிகள் என 17 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவிலான 9 பணிகள்;

தஞ்சாவூர் மண்டலம், பட்டுக்கோட்டையில் 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் தினசரி சந்தை மேம்பாட்டுப் பணி;

திருநெல்வேலி மண்டலம், செங்கோட்டை, திருச்செந்தூர் ஆகிய நகராட்சிகளில் 3 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் பூங்கா மேம்பாட்டுப் பணி மற்றும் அறிவுசார் மையம்;

மதுரை மண்டலத்தில் 2 கோடி ரூபாய் செலவில் மேலூர் அரசு மருத்துவமனையில் தங்குமிடம், மானாமதுரையில் நகராட்சி அலுவலகக் கூடுதல் கட்டடம்;

என மொத்தம் 26 கோடியே 59 இலட்சம் மதிப்பீட்டில் 14 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

**ஓட்டேரி கால்வாயின் குறுக்கே புதிய பாலம்**

அண்ணாநகர் மண்டலம், வார்டு - 98ல் உள்ள ஓட்டேரி கால்வாயின் குறுக்கே ஆஸ்பிரன் கார்டன் 2வது தெருவையும், கீழ்ப்பாக்கம் தோட்டம் தெருவையும் இணைக்கும் இடத்தில் இருந்த பழைய பாலத்தை இடித்துவிட்டு, உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ், கீழ்ப்பாக்கம், அண்ணாநகர், ஐ.சி.எப். அயனாவரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 65 மீ. நீளம் மற்றும் 11.50 மீ. அகலத்தில் (இருபுறமும் நடைபாதை உட்பட) புதியதாக கட்டப்பட்டுள்ள பாலம்;

**இறகுப்பந்து விளையாட்டு அரங்கங்கள்**

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், தண்டையார்பேட்டை, சர்மா நகர், 6வது தெருவில் 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் அண்ணாநகர் மண்டலம், எல்.பிளாக் 19வது தெருவில் 16 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இறகுப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட விளையாட்டுத்திடல்;

என மொத்தம் 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 3 திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை பாரதி நகர் பகுதியில், 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள்;

பெருங்குடி / சோழிங்கநல்லூர் மண்டலம், பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி லிங்க் சாலை முதல் நூக்கம்பாளையம் சாலை வரை உள்ள பகுதிகளுக்கு 98 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்;

அம்பத்தூர் மண்டலத்தில் 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு 31வது தெருவில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 68வது தெருவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் பாடி மேம்பாலத்தின் அருகிலுள்ள பிரதான குடிநீர் குழாயுடன் நெகிழிரும்பு குடிநீர் குழாயினை இணைக்கும் பணிகள்;

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

---

## ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ்

# பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளைக்கு வீடு!

## உடனடியாக வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச் 10 -**

**பத்மஸ்ரீ திருமதி. சின்னப் பிள்ளை அவர்களுக்கு ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் உடனடியாக வீடு வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முன்னாள் இந்திய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயி அவர்களிடம் கடந்த 2000-ஆம் ஆண்டில் “ஸ்த்ரிசக்தி” புரஸ்கார் விருது பெற்றவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்கள். அவர் சமீபத்தில் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தில் தனக்கு வீடு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை வழங்கப்படவில்லை என்று வேதனையுடன் தெரிவித்து இருந்தார்.

இந்த செய்தியினை கேள்விப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்கு புதியதாக வீடு வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தினார்.

இதன்படி பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்கு ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்டுள்ள ஒரு செண்ட் வீட்டு மனையுடன் பில்லுச்சேரி ஊராட்சி, திருவிழாப் பட்டி கிராமத்தில் கூடுதலாக 380 சதுரஅடி நிலத்திற்கான பட்டா வழங்கப்படுகிறது.

மேலும், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் பத்மஸ்ரீ திருமதி சின்னப்பிள்ளை அவர்களுக்குப் புதிய வீடு வழங்கப்படுகிறது. வீடு கட்டும் பணி இந்த மாதமே தொடங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2024! இன்று

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் தந்துள்ளவர்களை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (10-3-2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்.

இந்நேர்காணலின்போது, அந்தந்த நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும்.

வேட்புமனு அளித்தவர்கள், தங்களுக்கான ஆதரவாளர்களையோ பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையெல்லாம் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கு அவர்களின் மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கு குறையாத வகையில், அரசு நிதியை குறித்தொதுக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான சட்டமுன்வடிவினை இயற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் சிந்தனைச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, பாபு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 219 இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு. ஆர். செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி.ந.சாந்தி, தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், உலக மகளிர் நாளையொட்டி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ். குமரி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ஆர். சீதாலட்சுமி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் முனைவர் ஜெ.யு. சந்திரகலா, காஞ்சிபுரம் மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி கே. சங்கீதா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகை ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## நியூ ஜெர்ஸி - கலிபோர்னியாவில் கொண்டாட்டம்!

*வாஷிங்டன், மார்ச் 10-*

முதலமைச்சர் திராவிட இயக்கத்தின் பாதுகாவலர், உலகத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கையாக திகழ்பவர் தமிழ்நாட்டின் தாயுமானவருமான முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா அமெரிக்காவில் அயலகத் தி.மு.க. மற்றும் அமெரிக்க கலைஞர் அறக்கட்டளையும் இணைந்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அமெரிக்க வாழ்த் தமிழர்கள் கேக் வெட்டியும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடினர்.

இதில் அமெரிக்க நியூ ஜெர்ஸி மாநிலத்தில் நியூ ஜெர்ஸி பாலா தலைமையிலும், டெக்ஸாஸ் மாநிலத்தில் டெக்சாஸ் பாண்டி, கலிபோர்னியாவில் கார்த்திகேயன் தலைமையிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நியூஜெர்ஸி மாநிலத்தில் நடந்த நிகழ்வில் கிருத்திகா, தீபா, இளமுருகு, பிரபு, கோசல், ரியாஸ் ஆகியோரும் டெக்சாசில் டாலஸ் சக்தி, செல்வா, ஆனந்த், கார்த்தி, கோபல் ஆகியோரும், கலி போர்னியாவில் ஷான், கேசவ், நீல், ரியா, பல்வாள் சரவணகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், உலக மகளிர் நாளையொட்டி பெண் அரசு வழக்கறிஞர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு மகளிர் நாள் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன்,தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா, அரசு வழக்கறிஞர் எட்வின் பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டும் பணி நேற்று (09.03.2024) தூத்துக்குடியில் உள்ள திருநெல்வேலி பைபாஸ் சந்திப்பில் துவங்கப்பட்டது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, வண்ண ஓவியங்கள் தீட்டும் பணியைத் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் இரா.ஐஸ்வர்யா, தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் செ.ஜெனிட்டா, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# மலேசியாவில் ‘பெருந்தமிழ் விருது’ பெற்றார் கவிப்பேரரசு வைரமுத்து!

*கோலாலம்பூர், மார்ச் 10 -*

‘மகாகவிதை’ நூலுக்காக மலேசிய தமிழ் இலக்கிய காப்பகமும் தமிழ் பேராயமும் இணைந்து கவிப் பேரரசு வைரமுத்துவிற்கு விருது மற்றும் 1 லட்சம் ரிங்கிட் வழங்கின

கவிப்பேரரசு வைரமுத்து சமீபத்தில் எழுதிய ‘மகாகவிதை’ நூல் தமிழகம் மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளில் பெரும் பாராட்டு பெற்றதை தொடர்ந்து கடல் தாண்டியும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

மலேசிய தமிழ் இலக்கிய காப்பகமும் தமிழ் பேராயமும் இணைந்து கவிப்பேரரசு வைரமுத்துவின் சாதனை படைப்பான ‘மகாகவிதை’ நூலுக்கு ‘பெருந்தமிழ் விருதை’ மலேசியாவில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் வழங்கின.

தான்ஸ்ரீ டாக்டர் எஸ் .ஏ. விக்னேஸ்வரன் தலைமையில் டத்தோ ' ரீ எம்.சரவணன் முன்னிலையில் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் (8.3.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது மற்றும் 1 லட்சம் ரிங்கிட் கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு வழங்கப்பட்டது. பஞ்சபூதங்களைப் பற்றி விரிவாக பேசும் ‘மகாகவிதை’ நூலை படித்து மகிழ்ந்த ஐந்து நிபுணர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நீர் குறித்து இஸ்லாமிய கல்விக் குழுத் தலைவர் டத்தோ ' ரீ இஃபாலும், காற்று குறித்து மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை பேராசிரியர் முனைவர் இராஜேந்திரனும், தீ குறித்து சுலுத்தான் இதுரீசு கல்வியல் பல்கலைக்கழகம் தலைவர், மலேசியத் தமிழ்ப் புலவர் சங்கத்தைச் சேர்ந்த முனைவர் மனோன்மணதேவி அண்ணாமலையும், பூமி பற்றி மேனாள் காவல் துறை ஆணையர் புலவனின் புவி காக்கும்

வேட்கை மதிப்புமிகு டத்தோ ' ரீ தெய்வீகன் ஆறுமுகமும், ஆகாயம் குறித்து மலேசியத் தமிழ்நெறிக் கழகம் தேசியத் தலைவர் தமிழ்ப்பெருந்தகை இரா திருமாவளவனும் விரிவாக பேசி கவிப்பேரரசு வைரமுத்துவின் படைப்பை வெகுவாக பாராட்டினர்.

விருதினைப் பெற்றுக் கொண்டு பேசிய கவிப்பேரரசு வைரமுத்து, மலேசிய தமிழ் இலக்கிய காப்பகம் மற்றும் தமிழ் பேராயத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் பங்கேற்ற அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்காக சமீபத்தில் மலேசியா வந்தடைந்த கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு ‘டத்தோ’ ரீ எம் சரவணன் தலைமையில் விமான நிலையம் முதல் தங்கி இருக்கும் ஹோட்டல் வரை சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




மலேசியாவில் நடைபெற்ற விழாவில் மகாகவிதை நூலுக்காக மலேசிய தமிழ் இலக்கியக் காப்பகமும், தமிழ் பேராயமும் இணைந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு ‘பெருந்தமிழ் விருது’ வழங்கின.



சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகம், தொழிலாளர் நல வாரிய கருத்தரங்கு கூடத்தில், நேற்று முன்தினம் (08.03.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 59 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ. தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன். கோதண்டராமன், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.என். ஜோ. டி குருஸ், சி. கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம. இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) முகாம் அலுவலகத்தில் உலக மகளிர் தினத்தையொட்டி, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி மற்றும் கழக மகளிர் அணி நிருவாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் 2024! 39 பேர் அடங்கிய

# காங்கிரஸ் முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

### வயநாடு தொகுதியில் ராகுல்காந்தி மீண்டும் போட்டியிடுகிறார்!

புதுடெல்லி, மார்ச் 10 -

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்தார். GFX அப்போது, சத்தீஸ்கர், கர்நாடகா, கேரளா, லட்சத்தீவு, மேகாலயா, நாகாலாந்து, சிக்கிம், தெலுங்கானா மற்றும் திரிபுராவில், காங்கிரஸ் சார்பில் போட்டியிடும், 39 பேர் அடங்கிய முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. வயநாடு தொகுதியில் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் போட்டியிடுகிறார். ஆலப்புழா தொகுதியில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபாலும், சத்தீஷ்கர் முன்னாள் முதலமைச்சர் பூபேஷ் பாகல், ராஜ்நான்காவுன் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். காங்கிரஸ் மூத்த தலைவர் சசிதரூர் திருவனந்தபுரத்தில் மீண்டும் போட்டியிடுகிறார். கர்நாடக மாநிலம் ஷிமோகா தொகுதியில் கீதா சிவராஜ் குமார் போட்டியிடுகிறார். கேரளாவில் முந்தைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வெளியிடப்பட்டுள்ள 39 காங்கிரஸ் வேட்பாளர்களில் 24 பேர் எஸ்.சி., எஸ்.டி, ஓபிசி பிரிவு வேட்பாளர்கள் என்றும், 15 பேர் பொது வேட்பாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 10 தமிழறிஞர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகள்!

# மூத்த பத்திரிகையாளர் வி.என். சாமிக்கு கலைஞர் எழுதுகோல் விருது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்

சென்னை, மார்ச் 10 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ.தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன். கோதண்டராமன், சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ்.இராமகிருஷ்ணன், ஆர்.என்.ஜோ. டி குருஸ், சி.கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம.இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு குடியிருப்புக்கான நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார்.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

**கனவு இல்லத் திட்டம்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 3.6.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதமி விருது, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருது போன்ற விருதுகளைப் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் மூலமாக வீடு வழங்கப்படும்" என்று கனவு இல்லத் திட்டத்தை அறிவித்தார்.

கனவு இல்லத்திட்டத்தின் முதற்கட்டமாக 3.6.2022 அன்று பேரா.முனைவர் கு. மோகனராசு, ந.செகதீசன் என்கிற ஈரோடு தமிழன்பன், பூமணி என்கிற பூ.மாணிக்கவாசகம், இமையம் என்கிற வெ. அண்ணாமலை, இ. சுந்தரமூர்த்தி மற்றும் கவிஞர் புவியரசு என்கிற சு. ஜகன்னாதன் ஆகிய ஆறு அறிஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கனவு இல்லத்திற்கான ஒதுக்கீட்டு ஆணை வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.

இவர்களுள் கவிஞர் புவியரசு என்கிற சு. ஜகன்னாதன் அவர்களுக்கு 03.05.2023 அன்றும், ந.செகதீசன் (ஈரோடு தமிழன்பன்), பூமணி (பூ.மாணிக்கவாசகம்), இமையம் என்கிற வெ. அண்ணாமலை, இ.சுந்தர மூர்த்தி ஆகியோருக்கு 24.05.2023 அன்றும் பேரா.முனைவர் கு. மோகனராசு அவர்களுக்கு 30.05.2023 அன்று கனவு இல்லத்திற்கான திறவுகோலும் வழங்கப்பட்டது.

கனவு இல்லத் திட்டத்தின் கீழ், 2021- 2022ஆம் ஆண்டுக்கு கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ. தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன் ஆகிய மூவருக்கும், 2022-23ஆம் ஆண்டுக்கு பொன். கோதண்டராமன், சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.என். ஜோ. டி குருஸ், சி. கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய பத்து அறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான துக்கீட்டு அரசாணைகளையும், 2023-24ஆம் ஆண்டுக்கு ம. இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு குடியிருப்புக்கான நிருவாக அனுமதி ஆணைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

**கலைஞர் எழுதுகோல் விருது**

"சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும், 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்" என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 6-9-2021 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருது மூத்த பத்திரிகையாளர் ஐ. சண்முகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் இதழியல் துறை மூலம் சமூக மேம்பாட்டிற்காகப் பல ஆண்டுகள் பணியாற்றிப் பெற்றுள்ள நீண்ட அனுபவங்களையும், தமிழ் இலக்கிய உலகுக்கு ஆற்றியுள்ள அருந் தொண்டுகளையும் பாராட்டி 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார். இவ்விருதுடன் 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – விடுதலை சிறுத்தைகள் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (8.3.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் – விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் **இரண்டு (2)** தொகுதிகளில் போட்டியிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. 13. விழுப்புரம் (தனி)
2. 27.சிதம்பரம் (தனி)

பிற கூட்டணிக் கட்சிகளின் இறுதி தொகுதிப் பங்கீட்டுக்கு உட்பட்டு இப்பட்டியல் உறுதி செய்யப்படும்.

8.3.2024
(தொல்.திருமாவளவன்)
தலைவர்,
விடுதலை சிறுத்தைகள் கட்சி

8/3/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், கிராமி விருது பெற்ற செல்வகணேஷ் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திட்டப் பணிகள்! முதல்வர் திறந்து வைத்தார்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் 69 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி 15, பணிமனை 196 - கண்ணகி நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்களை மாற்றியமைத்தல் மற்றும் 38 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல் மற்றும் ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் பிளம்பிங் ஏற்பாடுகளுடன் HDPE தொட்டிகள் அமைக்கும் பணி;

என மொத்தம் 195 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

வேலூர் மண்டலம், திருவத்திபுரம் நகராட்சியில் 4 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், திண்டிவனம் நகராட்சியில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம்;

திருநெல்வேலி மண்டலம், களக்காடு நகராட்சியில் 4 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தினசரி சந்தை, பத்மனாபபுரம் நகராட்சியில் 6 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம்

என மொத்தம் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**நுங்கம்பாக்கம் பைகிராப்ட்ஸ் கார்டன் சாலைக்கு மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறந்து வைத்தல்**

சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையை நிறுவிய டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்களின் 84-வது பிறந்தநாளையொட்டியும், அவரது மருத்துவ சேவைக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் வகையிலும் நுங்கம்பாக்கம், ஹாடோஸ் சாலை (Haddows Road) முதல் வாலேஸ் கார்டன் (Wallace Garden) 2-வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீட்டர் நீளத்தில் உள்ள பைகிராப்ட்ஸ் கார்டன் சாலைக்கு மருத்துவர் எஸ்.எஸ். பத்ரிநாத் சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.


இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ.சரவணன், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற தேர்தல் 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (8.3.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் **1 (ஒரு)** தொகுதியில் போட்டியிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

வைகோ
(வைகோ)
பொதுச்செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்தின் தலைவர் இ.ஆர்.ராஜ் நாராயணன் சந்தித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, வழக்கறிஞர் கிருஷ்ணா ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### விழுப்புரம் அரசு மருத்துவமனையில்

# புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி. தடுப்பூசி திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 10-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, விழுப்புரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி. தடுப்பூசி திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

கருப்பை வாய் புற்றுநோய்க்கு மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) முக்கிய காரணமாகும். தேசிய நோய்த் தடுப்பு திட்டத்தில் எச்.பி.வி. தடுப்பூசியை நடைமுறைப்படுத்திய நாடுகளின் அனுபவம், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் முந்தைய நிலைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை காட்டியுள்ளது.

மனித பாப்பிலோமா வைரசுக்கு தடுப்பூசி போடுவது, உலக சுகாதார நிறுவனத்தின் 2030ஆம் ஆண்டிற்குள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிக்கும் கொள்கையின் அடித்தளமாக அமையும். எச்.பி.வி. தடுப்பூசி திட்டம் இந்தியாவில் ஒரு சில மாநிலங்களில் ஏற்கனவே நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் 9 முதல் 14 வயது வரையிலான பெண் குழந்தைகளை உள்ளடக்கும் வகையில் எச்.பி.வி தடுப்பூசி திட்டம் இலவசமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இது போன்ற திட்டத்தை செயல்படுத்துவது இதுவே முதல் முறை ஆகும்.

தடுப்பூசியின் நன்மைகள் குறித்து உணர்த்துவதற்காக எச்.பி.வி தடுப்பூசி பற்றிய தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு (IEC) நடவடிக்கைகள் ஏற்கனவே விழுப்புரம் நகரத்தில் உள்ள மருத்துவ நிபுணர்களுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 9 முதல் 14 வயதுடைய ஒவ்வொரு பெண்ணுக்கும் இரண்டு டோஸ் HPV தடுப்பூசியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதல் தடுப்பூசி போடப்பட்ட நாளிலிருந்து 180 நாளன்று அடுத்த தடுப்பூசி போட வேண்டும்.

முதற்கட்டமாக, விழுப்புரம் நகரில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள புற்றுநோய் நிறுவன பரிசோதனை மையத்தில் தகுதியான சுமார் 2,000 சிறுமிகளுக்கு முதல் டோஸ் HPV தடுப்பூசி போடப்படும். பின்னர், மாநில சுகாதாரத் துறை, தேசிய சுகாதாரப் பணி மற்றும் ரோட்டரி சேவை அமைப்புகளின் ஒத்துழைப்புடன், விழுப்புரம் நகரில் உள்ள ஒவ்வொரு பள்ளிகளிலும் சாத்தியமான வகையில் படிப்படியாக தடுப்பூசி போடப்படும். இது பின்னர் மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் உள்ள தகுதியுள்ள பெண் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர் ஆர். சேஷசாயி, செயல் துணைத் தலைவர் டாக்டர் இ. ஹேமந்த் ராஜ், இயக்குநர் டாக்டர் கல்பனா பாலகிருஷ்ணன் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி மற்றும் மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 213 தூய்மைப் பணியாளர்களுக்கு

# கழிவுநீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 10-**

**தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு கழிவு நீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு கழிவு நீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்அகற்றும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையிலும், தூய்மைப்பணியில் ஈடுபட்டுள்ள பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் நேரடியாக கழிவு நீர் அகற்றும் பணி செய்வதை தவிர்க்கும் பொருட்டும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில் 50 விழுக்காடு மானியமாகவும், புதிய தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் இதர பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 40 விழுக்காடு மானியமாகவும், என மொத்தம் 213 நபர்களுக்கு 125.86 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 61.29 கோடி ரூபாய் மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, 213 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 தூய்மைப் பணியாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என் நேரு, குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, தொழில் ஆணையர் மற்றும் இயக்குநர் எல். நிர்மல்ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்ற பொதுக்குழு உறுப்பினர் கல்லல் கரு.அசோகனை மாவட்டக் கழக செயலாளரும்,கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் நலம் விசாரித்தார்.உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஒன்றிய செயலாளர்கள் நா.நெடுஞ்செழியன், குன்றக்குடி சுப்பிரமணியன்,காரைக்குடி நகர் கழக செயலாளர் நா.குணசேகரன்மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, சேவியர் திருமதி சொர்ணம் அசோகன் ஆகியோர் சென்றிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் திருவையாறு தமிழ்ஐயா வெளியீட்டகத்தால் கலைஞர் தமிழ் குறித்து தயாரிக்கப்பட்ட 100 நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், திராவிட இயக்க எழுத்தாளர் கவிஞர் சண். அருள்பிரகாசம், திருவையாறு, ஔவைக் கோட்டம் நிறுவனத் தலைவர் முனைவர் மு. கலைவேந்தன், எழுத்தாளர் இமயம் மற்றும் நூலாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்குடியில் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் - மு.தென்னவன் - சென்னை அரங்கநாதன் சிறப்புரை!

*சிவகங்கை. மார்ச். 10.*

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகர் கழகத்தின் சார்பில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் மு. க .ஸ்டாலின் 71 வது பிறந்தநாள் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் காரைக்குடி 5 விளக்கு அருகில் நகர்மன்ற தலைவர் எஸ். முத்துத்துரை தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொருளாளர் சுப. துரைராஜ் , சன். சுப்பையா, உதயம் ராசு, லட்சுமி ராஜகணேஷ், சொக்கலிங்கம், அன்பு, சேவியர், போஸ் குணசேகரன், குழ. ஜான் கென்னடி ,ஆகியோர் முன்னிலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகர் கழகச் செயலாளர் நா. குணசேகரன் வரவேற்றுப் பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக்கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் .

இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி.பாலா , ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப.சின்னத் துரை, கே. ஆர். ஆனந்த், பூபால சிங்கம் ,நாகனி ரவி, லெ.மு. ரவிச்சந்திரன்,பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய குழு தலைவர் திருமதி சொர்ணம் அசோகன், பா. கணேசன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளிர்ணி தெரசா ஒன்றியதுணை செயலாளர் முத்துகுமார் சேவியர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நகர்கழக துணைச் செயலாளர்சொ.கண்ணன் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை காரைக்குடி நகர்கழகச் செயலாளரும், நகர மன்ற துணைத் தலைவருமான நா.குணசேகரன் தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

### தேர்தலை மனதில் வைத்து நாடகமாடுகிறார்!

# மோடியின் வேஷம் மக்களிடம் நிச்சயம் எடுபடாது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, மார்ச் 10-*

நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து நாடகமாடும் மோடியின் வேஷம் மக்களிடம் நிச்சயம் எடுபடாது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-



தினகரன்

தேர்தல் நாடகம்

நாடாளுமன்றத் தேர்தல் தேதி எந்த நேரத்திலும் வெளியாகக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரச்சாரத்தை தொடங்கி விட்டன. அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று மகளிர் தினத்தையொட்டி பிரதமர் மோடி தனது சமூக வலைதள பக்கங்களில் அதிரடியான ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதாவது வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர் விலை 100 குறைக்கப்படும், இதன்மூலம் பல லட்சக்கணக்கான பெண்களின் நிதிச்சுமை குறையும் என அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கி வருவதால்தான் மகளிர் மீது பிரதமர் மோடிக்கு திடீர் பாசம் வந்துவிட்டது என்பதையே இந்த அறிவிப்பு காட்டுகிறது. மேலும் இது அப்பட்டமான தேர்தல் நாடகம் என்றும் எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்படுகிறது. சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டு புலம்பியபோது அந்த விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், இல்லத்தரசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த விலை உயர்வு சுமையை குறைக்க வேண்டும் என்றும் அரசியல் கட்சிகள் கோரிக்கை வைத்தன. பல்வேறு கட்ட போராட்டங்களும் நடத்தப்பட்டன.

ஆனால் அதற்கெல்லாம் மோடி செவிசாய்க்கவில்லை. காஸ் விலையை குறைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தனை போராட்டம், எதிர்ப்புகள் வந்தும் மகளிர் மீது கரிசனம் காட்டாத பிரதமர் மோடி இப்போது திடீரென கரிசனம் காட்டுவது ஏன்? என எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த 9 ஆண்டுகளாகவே மகளிர் தினம் வந்து போனது. அப்போதெல்லாம் அறிவிப்பு வெளியிடாத பிரதமர் மோடி, தற்போது லோக்சபா தேர்தலை மனதில் வைத்துதான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். இது அவரது தேர்தல் தோல்வி பயத்தை காட்டுகிறது என எதிர்க்கட்சியினர் பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

2014-ம் ஆண்டு பா.ஜ. அரசு பொறுப்பேற்றபோது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை ரூ.106 டாலராக இருந்தது. அப்போது சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.410 மட்டுமே. ஆனால், தற்போது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை 86 டாலராக குறைந்துள்ளது. ஆனாலும், சமையல் எரிவாயு விலை ரூ.1000க்கு மேல் உயர்ந்துள்ளது. இது எப்படி? உண்மையிலேயே மக்கள் மீதும், மகளிர் மீதும் பிரதமர் மோடி அக்கறை கொண்டிருந்தால், இந்த அறிவிப்பை எப்போதே வெளியிட்டிருக்கலாம். தேர்தல் நெருங்கும்போது மட்டும் வெளியிட வேண்டிய அவசியமில்லை.

இதுவரை பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு,நாடாளுமன்றத்தில் 9 நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளது. ஒவ்வொரு முறை பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்போதும், சமையல் காஸ் சிலிண்டர் விலையை மோடி அரசு குறைத்திருக்கலாம். அப்படி குறைத்திருந்தால், அது மக்கள் மீது அக்கறை கொண்ட முடிவு என போற்றப்பட்டிருக்கும். ஆனால், இப்போது அறிவித்திருப்பது தேர்தலை மனதில் வைத்துதான் என்பதையும், இது பிரதமர் மோடி மற்றும் ஒன்றியஅரசின் பம்மாத்து வேலை என்பதையுமே காட்டுகிறது. இந்த வேஷம், மக்களிடம் எடுபடாது என்பது மட்டும் நிச்சயம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆழியாறு அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, மார்ச் 10–

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், ஆழி யாறு பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்குட்பட்ட நிலங்களில், நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு, 11.03.2024 முதல் 15.04.2024 முடிய 35 நாட்களில் 30 நாட்கள் தண்ணீர் திறப்பு என்ற அடிப்படையில், ஆழியாறு அணையிலிருந்து 350.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டத்திலுள்ள 6400 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.

# மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்து நடை!

## ஔவையார் விருதுபெறும் எழுத்தாளர் திருமிகு பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ்க்கு முதல்வர் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 10-**

**2024 ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருது பெறும் எழுத்தாளர் திருமிகு பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தள வாழ்த்துச் செய்தி வருமாறு :**



சாதி, மதம், பாலினம், இனம் எனப் பல்வேறு அடையாளங்களினூடே ஒடுக்குமுறையின் அரசியலை அழுத்தமாகப் பேசும் ‘கருக்கு’ எனும் தன்வரலாற்றுப் புதினத்தின் வழியாக உலக அளவில் கவனம் ஈர்த்த எழுத்தாளர் பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதைப் பெறுகிறார்.

மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்து நடையால் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றி, இந்த விருதுக்குத் தேர்வாகி இருக்கும் அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

### முதல்வர் பிறந்த நாள் விழா!

# அரக்கோணம் நகரத்தில் பொதுமக்களுக்கு உணவு!

## அ.அன்புலாரன்ஸ் தலைமையில் வழங்கல்!

*வேலூர், மார்ச் 10-*

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் - ராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி ஆணைக்கிணங்க மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி வழிகாட்டுதலின்படி அரக்கோணம் நகரத்தில் நகர துணைச் செயலாளர் அ.அன்புலாரன்ஸ் தலைமையில் பழைய பேருந்து நிலையத்தில் கேக் வெட்டி இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் கலாவதி அன்புலாரன்ஸ் வி.எஸ்.ஆர் ரவிச்சந்திரன், பூக்கடை என். ஹரிகிருஷ்ணன், மாவட்ட தொ.அ.து.அமைப்பாளர் பி.ஆர்.விமல், பி.மூர்த்தி, ஆர்.மகேஸ்வரி, ஜெயஷீலா, ஆர்.வி.சதீஷ்குமார், டி.தினேஷ்குமார், சிந்தை. டி.பழனி, அ.அருண் லாரன்ஸ், ஆர்.மாது, இரா. மணிகண்டன், பி. வெங்கடேசன், எஸ்.தேவராஜ், எஸ்.எழிலரசு, ஜி.டி.ராஜ், பி.பிரமிளா, பரமேஸ்வரி, ஏ.பிலால், புதுப்பேட்டை டி.சுரேஷ், பி.பாலாஜி, ஜி.செங்கல்வ ராயன், ஆனந்தன், டி.சாமு, ஆர். ரமேஷ், டி.ராஜன், ஆர். வினோத் குமார், ஏ. தினேஷ், சுகுமார், எம். முரளி, பி.ஜெகன், கார்த்திக், டி.அன்பு, எச்.பரத், சாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநர் இரவியின் பேதைமையும் அறிஞர்களின் மேதைமையும்!



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்

பேதைமையைக் குறித்து ஓர் அதிகாரமே பாடியிருக்கிறார் வள்ளுவர். பேதைமை என்றால் அறியாமைத் தன்மை. அதை வெளிப்படுத்த நாணப்படவேண்டும். அறிஞர் அளந்து பேசுவர், அழகுறப் பேசுவர், பதியப்பேசுவர், சிந்தனைக் கிளர்ச்சியுறப் பேசுவர், சிந்தித்துப் பேசுவர், நாம் சிந்திக்கப் பேசுவர்.

தமிழ்நாட்டிற்கு இரவி என்பவர் ஒருவர் ஆளுநராக வந்து இருக்கிறார். மேனாள் காவல்துறை அதிகாரி. அரசியல் ‘பரமபதத்தில்’ ஆளுநராக ஆகிவிட்டார். என்றுமுள தென் தமிழ்நாட்டிற்கு அவர் வந்தது முதல் அவரது எந்த நடவடிக்கைகளும் போற்றும் படியாக இல்லை.

அவருக்குச் சட்ட ஞானம் இல்லை, சட்டமன்ற மரபு தெரியவில்லை, ஜனநாயகம் தெரியவில்லை, எதுவும் புரியவில்லை என்று நாம் சொல்ல வரவில்லை.

ஆளுநர் இரவிக்கு எல்லாம் தெரியும், அவர் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. சங் பரிவாரத்தைச் சேர்ந்தவர். எதிரிகளிடம் அவர்களின் பரப்புரை உத்தி, ‘இருப்பதை இல்லாதது ஆக்குவது, இல்லாததை இருப்பதாகக் காட்டுவது’ - என்பது தான்!

உண்மையை உரைக்கவும் மெய்ப்பிக்கவும் தெரியாதவர்கள் இல்லை அவர்கள், ‘உண்மையைச் சொல்லவா? உண்மையை இல்லை என்று சொல்லவா?’ என்பதை குருஜிகளிடம் பேசிக் காட்டி ‘ஷொட்டு’ பெற்று விசித்திரமான - ‘விளையாது விளையும் கழனிகளை’ உருவாக்கப் பயிற்சி பெற்றவர்கள்.

அப்படிப் பயிற்சி பெற்ற நம் தமிழ்நாட்டு ஆளுநர் இரவி, அய்யா வைகுண்டருடைய 192-ஆவது பிறந்த நாள் விழாவிலே சில (கருத்துகளைக்) பொய்களைக் கூறியிருக்கிறார். அவை நாளேடுகளில் வெளியாகி இருக்கின்றன. அவர் என்ன பேசினார் என்று பார்ப்போம்.

(1) “.... புனித சநாதன மண்ணில் அய்யா வைகுண்டரும் வள்ளலாரும் அச்சுறுத்தப் பட்டார்கள்”

(2) “இராபர்ட் கால்டுவெல்லும் ஜி.யு.போப்பும் பள்ளிப் படிப்பில் வெற்றி அடையாமல் இடைநிற்றல் செய்துவிட்டவர்கள். அவர்கள் சமயப் பரப்புரைப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்கள்”

(3) “அப்படிப்பட்ட கால்டுவெல்தான் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிகளின் குடும்பம்’ எனும் நூலை எழுதியிருக்கிறார்.”

(4) “இவர்கள் வந்த பிறகு இங்குள்ள பள்ளிகள் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவ மெஷினரி பள்ளிகள் தொடங்கப்பட்டன.”

(5) “இவர்களைக் கொண்டு பிரிட்டிஷ் பேரரசு சநாதன தர்மத்தை அழித்தது”

(6) “மதம் மாறுதலுக்கு எதிராக இலட்சுமி நரசு செட்டி 90,000 பேர் கையெழுத்திட்ட மனு ஒன்றினைத் தயாரித்து கோரிக்கையாக பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிகழ்வு 11.11.1839 இல் நடந்தது”

மேலே ஆளுநர் பேசியதன் சாரமாக ஆறு புள்ளிகளைத் தந்துள்ளோம். அவர் பேச்சு ஒரு பொருளை யொட்டியதாக; தொடர்ச்சி உள்ளதாக ஏடுகளில் காணப்படவில்லை. இருப்பி னும், நாம் எடுத்துக் காட்டியுள்ள அவரின் (கருத்துகளுக்கு) பொய்யுரைகளுக்கு மறுப்புரைக்க விரும்புகின்றோம்.

(1)அய்யா வைகுண்டரும் வள்ளலாரும் சநாதனக் கருத்து களை, கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் இல்லை, இவர்கள் புதிய அமைப்பை உருவாக்கி அதன்வழி அனைத்து மக்களுக்கும் ‘சமநிலையை’ வற்புறுத்தியவர்கள். அய்யா வைகுண்டரைப் பற்றி பேரவைத் தலைவர் அப்பாவு அவர்களும் பாலபிரஜாபதி அடிகளாரும் விளக்க அறிக்கையை நாளேடுகளில் வழங்கி இருக்கிறார்கள். வள்ளலார் “மதித்த சமய வழக்கெல்லாம் மாய்ந்தது, வருணாசிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது” என்று பாடியவர். சநாதன வருணாசிரமக் கருத்து களுக்கு இவ்விரு பெரியவர்களும் எதிரானவர்கள். அது குறித்து ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படி இருக்க சநாதன ஆதரவாளர்கள் என்று கருதி இவர்களுக்கு யார் அச்சுறுத்தல்களைத் தெரிவித்தனர்? இதைப் பற்றி ஆளுநர் குறிப்பிட்டு இருப்பது பொய்யுரையாகும். வேண்டுமென்றே பேசியது ஆகும்.

(2) இராபர்ட் கால்டுவெல்லும், ஜி.யு. போப் (ஜியார்ஜ் யுக்லோ போப் - George Uglow Pope) பள்ளிக்கல்வியை முழுமையாகப் படிக்கவில்லை. இடைநிற்றல் செய்துவிட்டவர்கள். இவர்களைத் தான் சமயப் பரப்புநர் பணிக்கு அனுப்பி வைக்கப் பட்டார்கள் என்று ஆளுநர் இரவி கூறி இருக்கிறார்.

இராபர்ட் கால்டுவெல் ஸ்காட்லாந்துக்காரர். அவர் முறையாக கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மொழியியல் படித்தவர். ஆங்கில இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். பன்மொழி அறிஞர். தம்முடைய 20 ஆம் வயதில் பி.ஏ. தேறியவர். முதலாம் மாணவராகத் தேர்வு பெற்றவர். இவரது ஆய்வுகள், பணிகள் பற்றிய நூல்கள் நிரம்ப இருக்கின்றன. அவற்றில் இரண்டு நூல்கள் மிகச் சிறந்தவை ஆகும். இரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய ‘கால்டுவெல் அய்யர் சரிதம்,’ அடுத்து சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட “The Contribution of European Scholars to Tamil” எனும் நூல். இவ்விரண்டு நூல்களிலும் இராபர்ட் கால்டுவெல் பற்றியும் ஜி.யு.போப் பற்றியும் விரிவாகக் காணலாம். இவையன்றி இவர்களைப் பற்றிய தனி நூல்கள் ஏராளமாக உள்ளன.

ஜி.யு. போப் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். இவருடைய தமிழ்ப்பணிகள் பற்றியும், சைவச் சித்தாந்தம் பற்றிய ஆய்வைக் குறித்தும் “The Life of J.N.Nallasami pillai” எனும் நூலில் பரக்கக் காணலாம். இந்த இரு அறிஞர்கள் தமிழுக்கு வழங்கிய கொடை இன்னும் நின்று பேசுவன. இரா.பி.சேதுப்பிள்ளையும், ஜே.என். நல்லசாமிப் பிள்ளையும் அவ்விரு பெருமக்களின் ஆய்வுகளில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியதோடு; அவர்கள் வழங்கிய பிற தமிழ்க் கொடைகளை ஏற்றுக் கொண்டார்கள். தமிழுலகம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஆளுநர் இரவி தமிழை அறியாமல் வரலாற்றை சரிவரப் புரிந்து கொள்ளாமல் அவர்களின் கட்சியின் திட்டப்படி பொய் பேசுகிறார்.

டாக்டர் கால்டுவெல்லையும் டாக்டர் ஜி.யு. போப்பையும் ‘பள்ளிக் கல்வியைக் கூட முடிக்காமல் இடைநிற்றல் செய்துவிட்டு சமயப் பரப்புரைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள்’ என்று கீழ்மையும் பேதைமையும் வடிய ஆளுநர் இரவி கூறுவது மன்னிக்கத்தக்கது அல்ல.

(3 கால்டுவெல் மொழியியல் கற்றவர், முறையாகப் பல்கலைக் கழகத்தில் தேறியவர். இலக்கண, இலக்கிய அறிவுடையவர். அவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை - அதுவும் 15 ஆண்டுகள் கடினமாக உழைத்து எழுதிய ஓர் ஆய்வு நூலை ஆளுநர் இரவி ஏகடியம் செய்கிறார் என்றால் அவர்களின் ‘பழுத்த’ ஆரிய காழ்ப்பின் அடையாளமே தவிர அது வேறு என்ன?

(4) கிறிஸ்துவ மெசினரிகள் வந்து பள்ளிகளைத் தொடங்கினர். மருத்துவம் பார்த்தனர். சாதி பார்க்காமல் கல்வியை அளிக்க ஏற்பாடுகள் நடந்தன. சநாதனிகள் கல்வியை, சமூக நிலையை சமூகமாக வைத்திராதபோது நீங்கள் நடத்திய பள்ளிகள் தானாக அழிந்தன. ஏன்? - திரிமேனிகள் அப்பள்ளிகளில் - கல்லூரிகளில் படித்து உயரவில்லையா? ஆளுநர் இரவி சமஸ்கிருதம் படித்தா ஐ.பி.எஸ். ஆனார்?

(5) பிரிட்டிஷ் பேரரசு சநாதனத்தை எங்கே அழித்தது? சநாதனம், அரசுகள் மாறுகிறபோது புது வேடம் தாங்கிக் கொள்ளுமே. அதுதான் அழிவில்லாதது ஆயிற்றே. அதன் கருத்தாக்கள் புது வியாக்யானங்களை வழங்கி நிலை பெறச் செய்து விடுவார்களே? - அப்படி இருக்கிறபோது சநாதனம் எங்கே அழிந்தது? மிகவேகமாகச் சுழலும் அந்த நால் வேதசக்கரத்தில் அய்ரோப்பிய ஜனநாயகம், அரசியல், கல்வி, ஒரு வெட்டுக் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதற்குத்தான் ஆளுநர் இரவி போன்றவர்கள் கூக்குரல் எழுப்புகிறார்கள். அந்த வெட்டுக் காயம் விரிவுபட பட கூக்குரல் அதிகமாகிறது.

(6) ஆளுநர் இரவி காஜுலு இலட்சுமி நரசு செட்டி (1806-1868) பற்றிப் பேசி இருக்கிறார். அவர் அக்கால கட்டத்தில் சென்னை மாநகரின் பெரும் வணிகராக இருந்தவர். ‘இந்து’ என்கிற கருத்தியல் பரவாத நேரம் அது. சூத்திர, தாழ்த்தப் பட்ட மக்களின் ஈர்ப்பு கிறிஸ்தவ சமயப் பரப்புரையால் கவர்ச்சிக்கு ஆளாகி இருந்த சமயம் அது. புதுக்கல்வியும் அரசியலும் ஜனநாயகமும் படித்த மக்களிடையே பொதுக் கருத்து உருவாக்கக் கூடிய மன எழுச்சி முகிழ்த்து இருந்த காலம் அது. ஆகவேதான் காஜுலு இலட்சுமி நரசு செட்டி ‘சுயசமய’ வழிபாட்டுக்கு ஊறு நேருமோ என்கிற ஓர் அச்சத்தைக் கிளப்பி 1839 நவம்பரில் மனு ஒன்றை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். ஆளுநர் இரவி இன்னும் கூறி இருக்க வேண்டிய செய்தியையும் நாம் சொல்ல விரும்புகின்றோம்.

மேலும் அது பொது அமைப்புகள் எதுவும் உருவாக்கப்படாத காலம் ஆகும். 1845 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி சென்னையில் முதன்முதலாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற முதல் பொதுக்கூட்டம் இது. இதை காஜுலு இலட்சுமி நரசு செட்டி கூட்டியிருந்தார். அவர் ‘கிரசண்ட்’ என்னும் ஆங்கில வார இதழை நடத்தி வந்தார். இவர் பெரு வணிகர், செல்வாக்கு உடையவர் என்பதால் கூட்டத்தைக் கூட்டினார்.

### கூட்டத்தின் நோக்கம் என்ன?

1845 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றி இருந்தது. அதன்படி கிறிஸ்தவ மதத்தில் ஒரு இந்து சேர்ந்துவிட்டாலும் அவர் சொத்துரிமையை இழக்க வேண்டிய தில்லை என்பதற்கு அச்சட்டம் புதிய வழி முறையை வகுத்தது. இதனை எதிர்த்துதான் காஜுலு இலட்சுமி நரசு செட்டி கூட்டத்தைக் கூட்டினார். இந்நிகழ்ச்சி கல்கத்தாவை எட்டியது.

இரவீந்திர நாத் தாகூரின் தந்தை தேவேந்திர நாத் தாகூர் 1851 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி காஜுலு இலட்சுமி நரசு செட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர், “கல்கத்தாவில் பிரிட்டிஷ் இந்தியா அசோசியேஷன் எனும் அமைப்பை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். இதே போல ஓர் அமைப்பைச் சென்னையிலும் ஏற்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி 1852 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 ஆம் தேதி கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியன் அசோசிஷன் - சென்னைக் கிளை” எனும் அமைப்பை இலட்சுமி நரசு செட்டி தோற்றுவித்தார். இதற்கு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வமைப்பு கல்கத்தாவின் கிளை அமைப்பாக நீண்டகாலம் செயல்படவில்லை. சென்னை மாகாண அமைப்பாகப் பெயர் மாற்றம் செய்து கொண்டு மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்” எனும் பெயரில் இயங்கியது. அதற்குரிய காரணத்தை கல்கத்தாவுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. “கல்கத்தா அசோசியேஷன், மேட்டுக்குடி மக்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். கடைநிலை, மத்திய தர மக்களின் வருந்தத்தக்க நிலையைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. கூட்டு ஆர்வம் மேற்கொள்ளாத வகையில் பல அம்சங்கள் இருக்கின்றன. ஆகவே கிளை அமைப்பாக செயல்படுவதிலிருந்து நாங்கள் விலகிக் கொள்கிறோம். ஆகவே, ‘மெட்ராஸ் நேடிவ் அசோசிஷன்’ (சென்னை சுதேசி சங்கம்) என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றோம்” என்று அக்கடிதத்தில் கல்கத்தாவுக்குத் தெரிவித்து விட்டனர். இந்த அமைப்புதான் சென்னை மாகாணத்தின் முதல் அரசியல் அமைப்பாகும்.

ஆளுநர் இரவி, இலட்சுமி நரசு செட்டியின் முதல் மனுவைப் பற்றிதான் குறிப்பிட்டு இருக்கிறார். அவர் மதம் மாறுதலுக்கு மட்டும் குரல் கொடுத்தவர் இல்லை - என்பதை இரவி புரிந்து கொள்ள வேண்டும். அவர் 1855- இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு தனது 4-ஆவது மனுவையும் அனுப்பி வைத்தார். அதில்; கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியை அகற்றி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடி ஆட்சியைக் கோரி இருந்தது. அவரின் முழுப் பரிமாணம் கிடைக்கவில்லை. வாழ்நிலையைப் பொறுத்துதான் உரிமைக் குரல் எழும்.

1868-இல் இலட்சுமி நரசு செட்டி மரணத்திற்குப் பிறகு இவ்வமைப்பு இயங்கவில்லை, பின்னர் சில ஆண்டுகள் கழித்து இயங்கத் தொடங்கியது. பிறகு இதனையொட்டி ‘சென்னை மகாஜன சபை’ உருவாயிற்று, இவ்வமைப்பின் கட்டடங்கள் இன்னமும் சென்னை அண்ணா சாலையில் இருக்கின்றன. இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்பு இந்த அமைப்புதான் இயங்கி வந்தது.

ஆளுநர் இரவியின் அய்யா வைகுண்டர் விழாப் பேச்சு அவரின் முழு அறியாமையை வெளிப்படுத்தி விட்டது. என்ன தான் அது அவர்களது இயக்கத்தின் -கட்சியின் உத்தி என்றா லும் ஆளுநரின் அறிவின் சூன்யத்தையே அது காட்டி விட்டது, அய்யா வைகுண்டர், வள்ளலார், இராபர்ட் கால்டு வெல், ஜி.யு.போப் போன்ற பெருமக்களின் மேதைமையை ஆளுநர் இரவியின் பேச்சு சூரியனைக் கொண்டு மறைப்பதாகும். ஆனால் ஆளுநர் இரவியின் பேதைமை ‘பளிச்சென’ அறிவுலகத்திற்குத் தெரிந்து விட்டது. இலட்சுமி நரசு செட்டியின் நிகழ்வை முழுவதுமாக ஆளுநர் அறிந்து கொள்ளாமல் அது ஒரு மதம் சார்ந்த பிரச்சினை என்று மட்டும் கருதியதுசரியானது இல்லை. எவ்வளவு எழுதினாலும் ஆளுநர் இரவிக்கும் அவரது அமைப்புகளுக்கும் நாணம் ஏற்படாது. இக் கட்டுரையை எழுதுவதன் மூலம் நம் தோழர்கள் செய்திகளைப் புதுப்பித்துக் கொள்வதற்குப் பயன்பட்டது என்பதுவே நமக்குக் கிடைத்த பலன் என்று நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

- திருக்குறள் (833)



வேலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் மாநகர தி.மு.க. சார்பில் கழக தலைவர் பிறந்தநாள் மற்றும் எதிர்வரும் ரமலான் பண்டிகையை ஒட்டி வேலூர் தொகுதியில் வாழும் ஏழை, எளிய இஸ்லாமியப் பெருமக்கள் 5071 நபர்களுக்கு ரூபாய்.25 லட்சம் மதிப்பில் பிரியாணிக்கு தேவையான அரிசி உள்ளிட்ட தொகுப்பு பொருட்களும், இறைச்சி வாங்கிக் கொள்ள ரூபாய் 200/ம் வேலூர் மாநகர கழக செயலாளர் உறுப்பினருமான ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில், அவருடைய தலைமையில் வழங்கப்பட்டது. இதில் தி.அ.முகமது சகி, வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கலந்துகொண்டு தொகுப்புகளை வழங்கினார். இதில், ஏ.ஆர்.முன்னா ஷெரிப், தங்கமணி ஆனந்தன், ஆர்.பி.ஏ.சசிகுமார், வி.ஜி.கே.சுந்தரவிஜி, ந.அசோகன், எம்.ஏ.கணேஷ் சங்கர், எஸ். தயாள்ராஜ், ஆர். சத்தியமூர்த்தி, ஜி.பாலமுரளி, கிருஷ்ணா, ஆர்.கே.ஐயப்பன், தி. அ. முனவர் பாஷா, பி. முருகப்பெருமாள், எம்.நூருல்லா ஜி.ரமேஷ், எஸ்.கதிரேசன், சி.சந்திரசேகரன், மண்டல குழுத் தலைவர்கள் ஆர்.நரேந்திரன், கே.யூசுப்கான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கந்திலி, கதிரிமங்களம், அச்சமங்களம் பகுதிகளில் நடைபெற்ற எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க தெருமுனை கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி,தலைமைக் கழக பேச்சாளர் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கந்திலி தெற்கு ஒன்றிய செயலாளர் டி.அசோக்குமார் விழா தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.சி.தேவகுமார்,மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## வாக்குகளைப் பிரிப்பதற்காகவே கூட்டணி விலகல் நாடகம்!

# மோடிக்கு எதிராக பழனிச்சாமி பேசாதது ஏன்?

### “புதிய தலைமுறை” தொலைக்காட்சி ‘நேர்பட பேசு’ விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி கேள்வி!

**மூத்த பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி “புதிய தலைமுறை தொலைக்காட்சியில் ‘நேர்பட பேசு’ விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:-**

தற்போது நடக்கப் போவது நாடாளு மன்றத்தேர்தல், இந்தத் தேர்தலில் இந்தியாவின் பிரதமர் யார் என்பதை தீர்மானிக்கின்ற தேர்தல், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா எந்தத் திசையை நோக்கி பயணிக்கப் போகிறது என்பதை தீர்மானிக்கின்ற தேர்தல் வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தல்.

அப்போது அந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்ப்பு வாக்குகள் இல்லை என்று நிராகரிக்கின்றது என்பது அந்த தேர்தலுக்கே செய்கின்ற துரோகம். மோடிக்கு எதிராக தற்போது எதிர்ப்பு தீவிரமடைந்து இருக்கிறது. 2019 க்கு முன்பு இருந்த சிக்கல்களை விட 2019க்கு பிறகு சந்திக்கின்ற சிக்கல் இன்னும் அரசியல் ரீதியாக தீவிரமடைந்து இருக்கின்றன.

நீதிமன்றங்களிலும் சரி, கவர்னர்மாளிகைகளிலும் சரி, சட்டப் பேரவைகளிலும் சரி தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களால் அடுத்து அடுத்து அரசியல் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் திருமாவளவன் குறிப்பிடுவது பி.ஜே.பி. எதிர்ப்பு வாக்குகளை அப்படி சிதறடிப்பது என்று அவர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் நடைபெற்று இருக்கக் கூடிய அதாவது இதற்கு முன்பு நடைபெற்று இருக்கின்ற எல்லாத் தேர்தல்களிலும் பி.ஜே.பி. பெற்ற வாக்குகளை விட? பி.ஜே.பிக்கு எதிராக பதிவான வாக்குகள் தான் அதிகமாக இருக்கிறது. அப்போ இந்துக்கள் அத்தனை பேரும் எங்கள் பின்னால் நிற்கிறார்கள் என்று அவர்கள் சொல்கின்றதே பொய்யாகுகின்றது.

**தமிழ்நாட்டில் அதே விஷயம் தொடர்ச்சியாக இங்கே பின்பற்றப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் இன்றைக்கு இந்தியா முழுவதும் ‘இந்தியா கூட்டணி’ என்று சேர்ந்துள்ளது.**

**இப்போது இந்துக்களின் பாதுகாவலர், இந்துக்களின் சாம்ராட் என்று மோடி தன்னை சொல்லி வருகிறார். அந்த இந்துக்களுக்கு பிரதமர் மோடி என்ன செய்து இருக்கிறார். பெரும்பான்மையான இந்துக்களுக்கு, மக்களுக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூக மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு பகுஜன் என்று அறியப்படுகின்ற இந்த மக்களுக்கு என்ன நலத்திட்டங்களை மோடி கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார் என்ற கேள்விக்கு இந்தத் தேர்தல் பதிலளிக்கப்போகிறது. அதிலே எடப்பாடி பழனிச்சாமியினுடைய செயல் என்ன அப்படி என்பது தான் கேள்வி எழுப்பப்படுகிறது.**

இரண்டாவது சமீபத்தில் இன்றைக்கு எல்.பி.ஜி. மானியத்துக்காக ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள். 2020 இல் கொரோனா காலக்கட்டத்திற்கு மத்தியில் எல்.பி.ஜி. மானியம் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட மானியம் 2023 வரைக்கும் வழங்கப்படவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது? அந்த மூன்று ஆண்டுகளுக்கான இழப்பீட்டுத் தொகையை யார் தரப்போகிறார்கள்? என்கின்ற கேள்விக்கு மோடி அரசு பதில் சொல்லப் போகிறதா? அந்த பதிலை எடப்பாடி பழனிச்சாமி கேட்டு வாங்கித் தந்து இருக்கிறாரா? பெட்ரோல் விலை என்னமாக ஏறிப்போய் இருக்கிறது? 2019 இல் எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியவில்லையா? இவையெல்லாம் தெரியாமல் தான் அவர்களுடன் எடப்பாடி பழனிச்சாமி கூட்டணி வைத்து இருந்தாரா? இப்போது வாக்கை பிரிப்பதற்காக இந்த கூட்டணி விலகல் நடந்திருக்கின்றது என்று திருமாவளவன் கொடுக்கின்ற சந்தேகத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தான் காரண கர்த்தாவாக இருக்கிறார்.

சமீபத்தில் இராமர் கோவில் திறந்தாங்க. அந்த இராமர் கோவில் திறப்புக்கு, நாங்கள் கரசேவைக்கு எல்லாம் ஆள்அனுப்பினோம் என்று கே.பி.முனுசாமி பேசினார். இது தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற சிறுபான்மை மக்களை பாதுகாக்கின்ற இலட்சணமா? (இராமரை வைத்து மக்களை ஏமாற்றினால் இராமர் நிச்சயம் தண்டனை கொடுப்பார் என்று முனுசாமி பேசினார்) இராமரை வைத்து மக்களை ஏமாற்றுபவர்கள் யார் என்ற கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமியின் பதில் என்ன?



**இந்திரகுமார் தேரடி**
மூத்த பத்திரிகையாளர்

மோடியை மறைமுகமாக எதிர்ப்பதற்கு என்ன அவர் திரைப்படமா எடுக்கிறார்? அதில் உள்ள குறியீடுகளை கண்டறிந்து பேசுவதற்கு, மக்கள் மத்தியில் அரசியல் பேசுகிறார். அந்த அரசியலை வெளிப்படையாக பேச வேண்டும். இதில் சிறுபான்மை வாக்குகள் என்பதற்காகத்தான் எடப்பாடி பி.ஜே.பி.யில் இருந்து வெளியே வந்த உடனே பேசிய வரிகள். சிறுபான்மை வாக்குகள் மட்டும் தான் பி.ஜே.பி. எதிர்ப்பு வாக்குகள் என்று சொல்லுவதே முதலில் அயோக்கியத்தனமானது.

**இந்தியாவில் இருக்கக் கூடிய பெரும்பான்மையான இந்துக்கள் பி.ஜே.பி.க்கு எதிராக வாக்களித்து இருக்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், அதற்கு முந்தைய நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களிலும், அப்போது பெரும்பான்மை இந்துக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். இல்லை இந்துக்களுக்கு பிரச்சினை இல்லை இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும், பௌத்தவர்களுக்கும் தான் பிரச்சினை என்று சொல்வதே மோசடியான வாதம். இவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற ஒவ்வொரு திட்டத்தாலும் பாதிக்கப்பட்டு இருப்பது யார் என்றால் பெரும்பான்மையான இந்துக்கள் தான். அந்தப் பெரும்பான்மையான இந்துக்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் என்ன நிவாரணத்தை வாங்கிக் கொடுக்கப்போகிறார்?**

செ ன்னை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டது யார்? பெரும்பான்மையான இந்து மக்கள் தான் பாதிக்கப்பட்டார்கள். எல்.பி.ஜி. சிலிண்டர் விலை ஏற்றப்பட்டதால் பாதிக்கப்பட்டது யார் பெரும்பாலான இந்துக்கள் தான். பருப்பு விலை, அரிசி விலை எல்லாம் 40 சதவிகிதம், 53 சதவிகிதத்திற்கும் மேல் ஏறி இருக்கின்றது என்ற குற்றச்சாட்டால் பாதிக்கப்பட்டது யாரு? பெரும்பான்மையான இந்துக்கள் தான். ரிசர்வேசன் கூடாது என்று இவர்கள் போய் உச்சநீதிமன்றத்தில் வழக்கு போடுகிறார்கள். தமிழ்நாடு ஒவ்வொரு வழக்கிலும் எதிர்த் தரப்பாக ஆஜராகி ரிசர்வேசனுக்கா வாதாடியது. அருந்ததியர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வாதாடியது ஒன்றிய அரசு தரப்புதான். அந்தத் தரப்புக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் என்ன பதிலடியை கொடுத்திருக்கிறார்? சிறுபான்மையினர் சிறுபான்மையினர் என்று மட்டும் பேசுகிறாரே அவர் பெரும்பான்மையான இந்துக்களுக்கு என்ன நீதியை பெற்றுத் தந்திருக்கிறார்?

எடப்பாடி பழனிச்சாமி பா.ஜ.க.வில் இருந்து வெளியே வந்த உடனே நான் பா.ஜ.க.வில் இருந்து வெளியே வந்து விட்டேன். இனிமேல் இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு அரணாக, சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அரணாக இருக்கப் போறேன், இனிமேல் எல்லாம் சுத்த பத்தமாகத் தான் இருக்கும் என்று சொல்லி எடப்பாடி பழனிச்சாமி தான் முதலில் டிக்ளேர் செய்கிறார்.

**ஆனால் அவர் வைக்கின்ற விமர்சனங்கள் இப்போது வரைக்கும் மோடிக்கு எதிராக எதாவது ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் பேசி இருக்கிறாரா? மோடி எடுத்துக் கொடுக்கின்ற அஜண்டா பாயிண்ட்ஸை அப்படியே இவர் பின்பற்றி தமிழ்நாடு முழுக்க இவர்போராட்டமாக நடத்துகிறார். மோடி வந்து போதைப்பொருள் மாநிலம் என்று பேசிவிட்டுப் போகிறார். இந்தியாவிலேயே மிகப்பெரிய போதைப்பொருள் மாநிலமாக இருப்பது உத்தரப்பிரதேசம்.**

**அங்கே விட்டு விட்டு தமிழ் நாட்டில் 0.1 சதவிகித கஞ்சாவும், 0.06 சதவிகிதம் மற்ற போதைப் பொருள்கள் பயன்பட்டுக்கொண்டு இருக்கின்ற குறைவான மாநிலத்தில், மோடி செட் செய்கின்ற அஜண்டாவிற்கு மாநிலம் முழுவதும் வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.**

இதில் பாதிக்கப்படுவது சிறுபான்மையினர் மட்டுமல்ல பெரும்பான்மை இந்துக்கள். இந்த பெரும்பான்மை இந்துக்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பெற்றுத் தந்த நீதி என்ன என்கின்ற கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

ஜல்லிக்கட்டு என்ற ஒரு விளையாட்டு அந்த விளையாட்டில் பெரும்பான்மையாக கலந்து கொண்டு விளையாடுபவர்கள் யார்? இந்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தான். அந்த இந்து சமுதாய மக்கள், அந்த ஜல்லிக்கட்டு கேட்டு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் போராட்டம் நடத்தினார்கள்.

அந்தப்போராட்டத்திற்கு தி.மு.க. இங்கிருந்து தொடர்ந்து வழக்கு நடத்தியது. அ.தி.மு.க. வழக்கு நடத்துகிறேன் என்கின்ற பெயரில் சும்மா இருந்தது.

ஓ.பி.எஸை கை கழுவி விட்டு விட்டோம். ஜெயலலிதா இறந்து விட்டார் அவர்தான் கரசேவைக்கு ஆட்களை அனுப்பினார். அதனால் அவர் எங்கள் தலைவர் இல்லை என்று நிராகரிக்கப்போகிறாரா? இங்கே ஆர்.எஸ்.எஸை.கால் ஊன்ற விட்டார்கள் அவர் இப்போது இறந்து விட்டார், அதனால் இப்போது அவர்களை புறக்கணிக்கிறோம் என்று எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பாரா? ஓ.பி.எஸை மட்டும் கை கழுவுவதற்கான காரணம் என்ன? பெரும்பான்மை இந்துக்களை ஏமாற்றுவதற்காக.

அந்த ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் ஒன்றிய அரசு தான் தமிழ்நாடு அரசுக்கு எதிராக வாதாடியது. அனிமல் போர்டு ஆப் இந்தியா, எல்.முருகன் அவர்களுக்கு கீழ் இருக்கக் கூடிய அமைப்பு . அந்த அமைப்பிடம் எல்.முருகனை சொல்ல சொல்லி நிறுத்தி இருக்கலாமே. எதற்கு வழக்கு நடத்துகிறீர்கள் என்று கேட்டு இருக்கலாமே? கேட்க வில்லை. இங்கே இருக்கக் கூடிய பெரும்பான்மை இந்துக்களுக்கு துரோகம் செய்துகொண்டிருக்கக் கூடிய இந்துக்களுக்கு எப்போதும் கூட்டணியில் பாதுகாப்பு அரணாக இருந்து கொண்டு பா.ஜ.க.வினருக்கு பாதுகாப்பை தந்து கொண்டு இருந்தார் எடப்பாடி பழனிச்சாமி.

சிறுபான்மையினர் வாக்குகளை குறி வைத்து அ.தி.மு.க.வை தனியே நிற்க வைத்து அதில் குளிர் காய பா.ஜ.க. நினைக்கிறது என்று திருமாவளவன் அவர்கள் ஒரு விமர்சனத்தை முன் வைக்கிறார். அது விமர்சனம். ஆனால், இஸ்லாமியர்கள், சிறுபான்மையினர், கிறித்துவர்கள், மொழி சிறுபான்மையினர் என்று பிரித்து நாம் தேர்தலை அணுகுவது கிடையாது. அவர்களையும் நாம் சக மக்களாகத்தான் மதிக்கிறோம். இந்தியர்களாகிய நாம் என்று தான் ‘இந்தியா கூட்டணி’ என்று பெயர் வைத்து அவர்கள்பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது இந்துக்களைத்தனியாக, இஸ்லாமியர்களைதனியாக அப்படி என்று பிளவுபடுத்தக் கூடிய கருத்துகளை தொடர்ந்து பி.ஜே.பி. பேசிக் கொண்டே இருக்கிறது என்பதினுடைய விளைவு தான் இங்கு இஸ்லாமியர்களின் வாக்குக்காக தனியாக எடப்பாடி பழனிச்சாமி பேசிக் கொண்டிருப்பது. கிறித்துவர்களுடைய வாக்குகளை தனியாக குறி வைத்து தனியாக எடப்பாடி பழனிச்சாமி பேசிக்கொண்டிருப்பது. எனக்கு ஒரே ஒரு டவுட். இது வரை பி.ஜே.பி.யோடு கூட்டணியில் இருந்து முரண்பட்டு பிரிந்த கட்சிகள் ஒன்றாக இருந்ததே இல்லை. அப்படி ஒன்றாக இருந்தாலும் அந்தக் கட்சி பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறது. மகாராஷ்டிராவில் சிவசேனாவில் இரண்டு பிளவுகள் ஒன்று உத்தவ் தாக்கரே, இன்னொன்று ஷிண்டே. இப்போது பி.ஜே.பி. ஆதரிக்கின்ற ஷிண்டேவுக்கு சின்னமும் கட்சியும் கிடைக்கிறது. எடப்பாடி அவர்களுக்கு எப்படி இந்தப் பிரச்சினை வராமல் இருக்கிறது என்ற சந்தேகம் இருக்கிறது.

இவ்வாறு இந்திரகுமார் தேரடி விவாதத்தில் பங்கேற்று பேசினார்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (08.03.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான பணி ஆய்வுக்கூட்டம் மற்றும் புத்தாக்கப்பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (8.3.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024



நேற்று (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2024 நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தும், 2025 நாடாளுமன்ற மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த உடன்படிக்கையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் எ. அருணாசலம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

**திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் அவர்களும் இன்று (9–3–2024) கலந்து பேசியதில், 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் தேர்தல் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வதெனவும்;**

**வருகிற 2025ஆம் ஆண்டு நடைபெற உள்ள மாநிலங்களவை (Rajya Sabha) தேர்தலில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.**

**(கமல்ஹாசன்)**
தலைவர்,
மக்கள் நீதி மய்யம்

**(மு.க.ஸ்டாலின்)**
தலைவர்,
தி.மு.க.



விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் நகராட்சிகளுக்கான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்ட நிறைவுற்ற முதற்கட்டப் பணிகளை தொடங்கி வைத்து, அருப்புக்கோட்டை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்கபாண்டியன், அசோகன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் நகர் மன்ற தலைவர்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



அரசுத் திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைவதை உறுதி செய்திட முதலமைச்சர் அவர்கள் 'நீங்கள்_நலமா' திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த முன்னெடுப்பின் கீழ், அரசுத்திட்டப் பயனாளிகளின் கருத்துகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

காவல்துறை சார்பில்

## நடமாடும் கட்டளை - கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாடுகள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, அவ்வாகனங்களுக்கான சாவியினை சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், அவர்களிடம் வழங்கினார்.

நவீன தொழில்நுட்பங்களை கொண்டு உள்நாட்டு பாதுகாப்பு சவால்களை காவல்துறை அதிகாரிகள் திறம்பட கையாளுவதற்காக மாநில காவல் படைகளின் நவீனமயமாக்கல் (Modernisation of Police Force) திட்டத்தின் கீழ் 93.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெகா சிட்டி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1030 இடங்களில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் நிறுவப்பட்ட 3090 Artificial Intelligence - ஆல் இயங்கும் CCTV கேமராக்கள், 753 வாகன கண்காணிப்பு சாதனங்கள், 7 வான் வழி கண்காணிப்பு ட்ரோன்கள் மற்றும் 7 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் நகரம் முழுவதும் விரிவான கண்காணிப்பு உறுதி செய்யப்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்கள் (Mobile Command and Control Centre - MCCC) நகர கண்காணிப்புக்காக பயன்படுத்த தயாராக உள்ளது. மேலும், 2250 கேமராக்கள் மற்றும் 650 வாகனங்கள் நிகழ்நேர கண்காணிப்பிற்காக தானியங்கி வாகன இருப்பிட அமைப்புடன் (Automatic Vehicle Location System - AVLS) நிறுவப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர காவல் நிலையங்களில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு, நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ட்ரோன்கள் மற்றும் CCTV கேமராக்கள் நிகழ்நேர வீடியோ பதிவுகளை அனுப்புகின்றன. MCCC வாகனங்கள் நகரம் முழுவதும் முக்கியமான பொதுக் கூட்டங்கள், போராட்டங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் இடங்களில் நிறுத்தப்பட்டு நிகழ்நேர வீடியோவை பதிவு செய்ய தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும்.

நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இரண்டு நைட் விஷன் ட்ரோன்கள், ஒருங்கிணைந்த கேமராக்கள் மற்றும் ஒலிப்பெருக்கி அமைப்புகள் மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர்விற்கான வான்வழி பார்வையை வழங்குகின்றன மற்றும் போக்குவரத்து நெரிசலை கண் காணித்து சரி செய்யவும் பயன்படுத்தப்படும். இந்த அம்சங்கள் அவசர காலங்களில் திறமையான தகவல்தொடர்புக்கு பயன்படும்.

இந்த நிகழ்ச்சியில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை தலைவர் (தெற்கு மண்டலம்) பிரேம் ஆனந்த் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுப்பணித் துறை சார்பில் - சாத்தூரில்

## புதிய சுற்றுலா மாளிகை - தேனியில் கூடுதல் சுற்றுலா மாளிகை!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,மார்ச்10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகை ஆகியவற்றை திறந்து வைத்தார்,

**சாத்தூரில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்!**

2021-22ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், இரண்டு தளங்களுடன், 4437 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சுற்றுலா மாளிகையானது, தரைத்தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், கூட்ட அரங்கம், பொது உணவுக்கூடம், ஓட்டுநர் ஓய்வறை மற்றும் முதல் தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், இரண்டு தங்கும் அறைகள் மற்றும் காத்திருப்புக்கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**தேனியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்!**

தேனி மாவட்டம், தேனி மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ஏற்கனவே அமையப்பெற்றுள்ள சுற்றுலா மாளிகை கட்டடத்தின் முன்புறம் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டிட 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5996 சதுர அடி பரப்பளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் தரைதளத்தில் குளிர்சாதன வசதியுடன் முக்கியஸ்தர்களுக்கான நான்கு அறைகளும், விருந்தினர்களுக்கான நான்கு அறைகளும், என மொத்தம் எட்டு அறைகள், சமையலறை, உணவருந்தும் அறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கூடுதல் சுற்றுலா மாளிகையானது அமைச்சர் பெருமக்கள், நீதியரசர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் தங்குவதற்காக உரிய வசதிகளுடன் இயற்கை சூழலுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில்

## ரூ.281.84 கோடியில் 1520 குடியிருப்புகள் - அடுக்குமாடி குடியிருப்புகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்**

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சென்னையில் பெரியார் நகர் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 62 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 480 புதிய குடியிருப்புகள்;

மதுரை மாவட்டம், மஞ்சள்மேடு திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 320 அடுக்குமாடி குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 27 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 264 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அறந்தாங்கி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 13 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 120 புதிய குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், மீனாட்சிபுரம் திட்டப் பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 24 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், மகாராஜசமுத்திரம் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 8 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 96 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள்வரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 88 திட்டப் பகுதிகளில் 3046.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 27,260 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப் பட்டுள்ளது.**

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளை திறந்து வைத்தல்**

சென்னை மாவட்டம், ஜாபர்கான்பேட்டையில் 48 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 120 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டம், தல்லாகுளத்தில், 59 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 224 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

**என மொத்தம் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எ.சரவண வேல்ராஜ், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி எம். விஜயலட்சுமி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர். க.விஜய கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு - திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி - முனைவர். பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, மார்ச் 10-

தருமபுரி மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி, முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி மாவட்டத்தை மையமாக கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை உருவாக்கி வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க நாளை (11.03.2024) தருமபுரி அரசு கலை அறிவியல் கல்லூரி வளாகத்திற்கு வருகை தர உள்ளார் அது சமயம் மாவட்ட எல்லையான தொப்பூர் முதல் வழி நெடுக திரளாக நின்று சிறப்பான வரவேற்பு அளிக்கும் வகையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்து சிறப்பான வரவேற்பு அளித்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் கோவிலில் ரூ.20.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ரோப்கார் வசதியை தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப் பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டார். அருகில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழாவையொட்டி சென்னை எழும்பூர் சிராஜ் மஹாலில் 72 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். அருகில் பகுதிச் செயலாளர்கள் சுதாகர், வேலு உள்ளனர்.

# கலைஞரும் நானும்

60



# “என்னம்மா பிரச்சினை? என்ன செய்யணும்?”

பாலபாரதி, முன்னாள் எம்.எல்.ஏ.,

**“அரசியலில் பெண்களின் பங்கு அதிகரிக்க வேண்டும் என விரும்பியதுடன், அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டியவர் கலைஞர். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவரைப் பார்த்து வியந்து கற்றுக் கொண்டவை ஏராளம்” என நினைவுகளைப் பகிர்கிறார் முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி.**

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசியல், கலைத்துறை எனப் பல வகைகளில் அறிந்திருந்தாலும், நேரடியான சந்திப்பும், அறிமுகமும் அமைந்தது 2006-ஆம் ஆண்டில்தான். திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக நின்றபோது, வேட்பாளர் அறிமுகம் செய்வதற்காக, கலைஞர் அவர்கள் வந்திருந்தார். பிரச்சார மேடையில் கலைஞர் அவர்களுடன் எங்கள் கட்சித் தலைவர்களும் இருந்தனர்.

திண்டுக்கல் வீட்டு வசதி வாரியத்தால் வீடு பெற்றவர்களுக்கு, நீண்ட காலமாக பட்டா தொடர்பான சிக்கல் நீடித்தது. அது தொடர்பான கோரிக்கை மனுவை, ‘திண்டுக்கல் தொகுதியின் கோரிக்கைகள்’ என எழுதி, கலைஞர் அவர்களிடம் அந்த மேடையிலேயே அளித்தேன்.

எப்படியும் அவர்தான் முதல்வர் ஆவார், அவர் கவனத்துக்குக் கொண்டு சென்றால் நிறைவேற்றித் தருவார் எனக் கொடுத்தேன். கலைஞர் சிரித்துக் கொண்டே “இன்னும் தேர்தல் முடியலையேம்மா, அப்புறம் கொடுத் துக்கலாமே” என அந்த மனுவைப் பெற்றார்.

மேடையில், அவர் பேசும்போது, “நிலமற்ற ஏழை மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்கிற வாக்குறுதியை கம்யூனிஸ்ட் கட்சிகளின் கோரிக்கைகளில் இருந்துதான் எடுத்துள்ளோம்” என அறிவித்தார். அவரை சந்தித்த முதல் நிகழ்வே ஏழை மக்களுக்கான பட்டா, நிலம் என்கிற நிகழ்வாக அமைந்தது.

## பூங்கா அரும்பும்

2006-11 காலகட்டத்தில் அவர் முதலமைச்சராக இருந்த அவையில், நான் உறுப்பினராக இருந்தேன். சட்டசபை நடைபெறும் நேரத்தில் அவர் இருந்தார் என்றால், சபையே கலகலப்பாக இருக்கும். காலை ஒன்பதரை மணிக்கு அலுவல் தொடங்குகிறது என்றால், பத்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விடுவார். ஒரு நாளும் தாமதமாக வந்து பார்த்தது இல்லை.

ஒருமுறை, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தோழர் நன்மாறன் அவர்கள், ‘மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அறிவித்தீர்களே, அது எந்த நிலையில் உள்ளது?’ எனக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த கலைஞர், சிரித்துக் கொண்டே ‘அரும்பும் நிலையில் உள்ளது’ என்றார். கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்ப, அந்த நேரத்தில் அவர் அளிக்கும் பதில் பொருள் நிறைந்ததாகவும், ரசிக்கும்படியும் இருக்கும்.

## இரண்டு கேள்விகள்

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் நீண்ட நாட்களுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன. எனது தொகுதிக்குட்பட்ட பகுதியான ரெட்டியார்சத்திரம் என்கிற ஊரில், போட்டியிட்ட எங்கள் கட்சியினரின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. அதிகாரிகள் கூறிய காரணங்களும் ஏற்புடையதாக இல்லை. இதையடுத்து கட்சியினருடன் சேர்ந்து திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டேன்.



**சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.**

எங்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றப்படும் நேரத்தில், ஒரு காவல் அதிகாரி ஓடி வந்து “சி.எம். உங்களிடம் பேசவேண்டுமாம் மேடம்” எனத் தொலைபேசியை அளித்தார். எதிர்முனையில் கலைஞர் இருந்தார். “என்னம்மா பிரச்சினை” எனக் கேட்டறிந்தவர், என்ன செய்யணும்மா? எனக் கேட்டார். “இப்போதைக்குத் தேர்தலை ரத்து செய்வதே சரியானது அய்யா” என்றேன். அன்றிரவே, தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை ரத்து செய்வதாக ஆணையிட்டார் கலைஞர்.

என்ன பிரச்சினை? என்ன செய்ய வேண்டும்? என இரண்டே கேள்விகள்தான். அதுவும், முதலமைச்சரே களத்தில் நிற்பவர்களிடம் கேட்பது எனில், சாதாரண விஷயமல்ல. கலைஞர் அந்த வகையில் அபூர்வமானவர். ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என நினைப்பதில் கலைஞருக்கு நிகர் யாருமில்லை.

## பெண்கள் நலனில்...

தமிழ்நாடு பெண்கள் ஆணையத்துக்கு, சட்ட அங்கீகாரம் வேண்டும் என நான் குரல் கொடுத்து வந்தேன். அதற்குத் தனி அதிகாரம், நிதி, சுயமாக இயங்கும் தன்மை ஆகியவை அளிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

முதியவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கைம்பெண்களுக்கான நிதி உதவித் திட்டத்தில், அவர்களுக்கு ஆண் வாரிசு இருக்கக்கூடாது என்கிற ஒரு விதி இருந்தது. அதை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தேன். வாரிசுகள் கவனிக்கவில்லை என்பதால்தான், அவர்கள் நிதி உதவி கேட்கின்றனர். அதேநேரத்தில், ‘ஆண் வாரிசுதான் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும், பெண் வாரிசு கவனிக்கத் தேவையில்லை’ என்கிற பாகுபாட்டினை ஏன் உருவாக்க வேண்டும்? அதனால் அந்த நிபந்தனையை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பினேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கலைஞர், நிபந்தனையை நீக்கி ஆணையிட்டார்.

## ‘தீக்கதிர்’ வாசிப்பு

நான் சட்டமன்றத்தில் இருந்தபோது, கட்சியின் மூத்தத் தலைவர்கள் தோழர்கள் என்.வரதராஜன், நன்மாறன் ஆகியோர் கலைஞரை சந்திக்க ஒருமுறை வருகை தந்தனர். தலைவர்கள் வந்து சேரும் வரை கலைஞர் அவர்களுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தீண்டாமைச் சுவர் இடிக்கப்பட்ட நேரம், கம்யூனிஸ்ட் கட்சி இந்திய அளவில் அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிய நேரம் என்பதால், அதுபற்றிப் பேசினார். “என்னம்மா, தீண்டாமைச் சுவர்தான் இடிச்சாச்சில்ல, இன்னும் ‘தீக்கதிர்’ல எழுதிக்கிட்டிருக்கீங்க’ எனக் கேட்டார். “அய்யா பிரச்சினைகள், உங்க கவனத்துக்கு வரவேண்டும் என்பதால் எழுதி இருப்பாங்க” என்றேன். இந்திய அளவில் மதச்சார்பற்ற கூட்டணி குறித்தும், எங்கள் கட்சி எடுத்துள்ள நிலை குறித்தும் அப்போது பேசிக் கொண்டிருந்தார்.

அப்போதும் வீட்டுமனைப் பட்டா தொடர்பான கோரிக்கை மனு அளித்தேன். உடனே அருகில் இருந்த உதவியாளர் சண்முகநாதன் அவர்களைப் பார்த்து, “அவங்க வரும் நேரம் எல்லாம் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வர்றாங்க, எனக்கு அதுகுறித்த விவரங்களைத் தெளிவாகக் கொடுங்க” எனக் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர், அந்தப் பிரச்சினைகளை 2008-ஆம் ஆண்டுத் தீர்த்தும் வைத்தார். 25 ஆண்டுகளாக நீடித்து வந்த பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

## சிறுபான்மை மாணவிகளுக்கு விடுதி

சிறுபான்மைச் சமூக மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்கு வசதியாகத் தனி உறைவிட விடுதி வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக் கொண்டு, ஐந்து மாவட்டங்களில் தொடங்குவதற்கு ஆணையிட்டார். அதில், திண்டுக்கல் மாவட்டமும் ஒன்று. இப்படித் தொடர்ச்சியாக மக்களின் தேவைகள் குறித்து கலைஞரிடம் கோரிக்கை வைத்துக் கொண்டே இருப்பதும், அவற்றை நிறைவேற்ற ஆவன செய்ததும், எப்போதும் கலைஞரை நினைத்துப் பார்க்க வைக்கும் நிகழ்வுகள். மக்களின் தேவைகளை அறிந்தவர் என்பதால், அவையெல்லாம் நடந்தன.

அந்த ஆட்சிக்காலத்தின் இறுதியில் அரசியல் ரீதியாக எதிர்நிலை எடுத்தோம். சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.

கலைஞர் அவர்களின் அரசியல் பக்குவம், மாற்றுக் கட்சியினரை அவர் அணுகும் விதம் ஆகியவற்றில் ஒரு சதவிகிதம் கற்றுக்கொண்டாலே போதும், நாம் அரசியலில் இயங்குவதற்கான தகுதியைப் பெற்று விடுவோம்.

**....பகிர்வார்கள்**

## ‘அவுட்லுக்’ காட்டும் திராவிட மாடல்!




கழக அரசு படைத்து வரும் சாதனைகளை ‘Dravidian Model: Leading By Example’ என்கிற தலைப்பில், பல்வேறு துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளோடு வெளிக் கொணர்ந்துள்ளது ஆங்கிலத்தில் வரும் ‘அவுட்லுக்’ இதழ். மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் சிறப்பாசிரியராக இந்த இதழை, மிக நேர்த்தியாக தயாரித்து இருக்கிறார். கல்வி, மருத்துவம், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், மொழியியல், நூலகத்துறை, பாலின சமத்துவம் என பல்வேறு தலைப்புகளில் பல தரப்பு நிபுணர்கள் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். தமிழ்நாட்டிடமிருந்து இந்திய ஒன்றியத்தின் பிற மாநிலங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய ‘திராவிட மாடல்’ திட்டங்களின் பயன்களை இவ்விதழ் மூலம் அறிந்துகொள்ளலாம். இணையத்தில் கட்டணமின்றி படிக்கக் கிடைக்கிறது. இணைப்பு :

https://www.outlookindia.com/magazine/05-march-2024

## ஃப்ளாஷ்பேக்



பொன்.அண்ணாவி



### பிறந்த நாள் வாய்ப்பு!

அண்ணன் நன்னியூர் ராஜேந்திரன் அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்த போது, என்னை தலைமைக் கழகப் பேச்சாளராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கினார். கழகத்தில் சேர்ந்த நாள் முதலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்க வேண்டும் என்பது என் நெடுநாள் கனவாக இருந்தது. 2012 மார்ச் 1-ஆம் நாளன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை தலைமைக் கழகப் பேச்சாளர் என்று அறிமுகம் செய்து கொண்டேன். “வாழ்த்துகள்ய்யா” என்றார்.

**–கவிஞர் பொன்.அண்ணாவி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், கரூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### போராட்ட அணிகள்!

1963-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு கொண்டு வந்த ஆட்சி மொழிகள் சட்டத்துக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தது கழகம். நெடிய போராட்டத்துக்குத் தயாராக வேண்டும் என அழைப்பு விடுத்தார் பேரறிஞர் அண்ணா. ஜூன் மாதத்தில் சென்னையில் கூடிய கழகத்தின் செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் நீண்ட போராட்டத்துக்கு முடிவு செய்யப்பட்டன. கலைஞர் தலைமையில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. நீண்ட கால சிறைக்குத் தயாராக இருப்பவர்கள், குறுகிய கால சிறைவாசத்துக்குத் தயாராக இருப்பவர்கள் என பட்டியல் தயாரிக்கப்பட்டு, போராட்ட அணிகள் பிரிக்கப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

413

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131